வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள்

ந.க.எண்.3503/ஆ2/2024 நாள்: 08.10.2025

பொருள்: பள்ளிக் கல்வி-வேலூர் மாவட்டம்-விபத்துக் காப்பீடு பத்திரம்-அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியரின் தாய்/தந்தை விபத்தில் மரணமடைந்தாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தலோ பாதிக்கப்படுகின்ற மாணவ/மாணவியர் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.75,000/- க்கான விபத்துக் காப்பீடு பத்திரம் வழங்குவதல்-விண்ணபிக்கும் வழிமுறைகள் தெரிவித்தல்-சார்பு.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.39 பள்ளிக் கல்வித் துறை (இ2) துறை நாள்: 30.03.2005.
2. அரசாணை (நிலை) எண்.127 பள்ளிக் கல்வித் துறை/இ2/துறை நாள்: 01.07.2005.
3. அரசாணை (நிலை) எண்.195 பள்ளிக் கல்வித் துறை நாள்: 27.11.2014.
4. அரசாணை (நிலை) எண்.113 பகஅ (2)த் துறை நாள்: 30.06.2023.
5. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.174/ஆ2/2023 நாள்: 20.06.2024.

-----

பார்வை(1) முதல் (4) வரை உள்ள அரசாணைகளின்படி, வேலூர் மாவட்டத்தில் பள்ளிக் கல்வித் துறையின் இயங்கும் அரசு/அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு முடிய கல்வி கற்கும் மாணவ/மாணவியரின் வருவாய் ஈட்டும் தாய் அல்லது தந்தை விபத்தில் மரணம் அடைந்தாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற மாணவ/மாணவியர் ஒவ்வொருவருக்கும் நிதியுதவி வழங்கும் திட்டம் மூலம் ரூ.75,000/- க்கான விபத்துக் காப்பீடு பத்திரம் பெற்று வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டதின் கீழ் இவ்வலுவலகம் பெறப்படும் சில கருத்துருக்கள், சார்ந்த பள்ளியின் EMIS-தளத்தில் பதிவேற்றம் செய்யப்படாமல் அனுப்பப்படுகின்றன. மேலும் சில பள்ளிகள், EMIS-தளத்தில் மட்டும் பதிவேற்றம் செய்துவிட்டு, கருத்துருக்கள் அனுப்பப்படாமல் உள்ளன. இப்போக்கு கண்டிக்கத்தக்கதாகும்.

இனிவரும் காலங்களில் இது போன்று செயல்படாமல், இத்திட்டத்தின் கீழ் உரிய நேரத்தில் பாதிக்கப்பட்ட மாணவ/மாணவியர்கள் பயனடையும் பொருட்டு காலதாமதத்திற்கு இடமளிக்காமல் கருத்துருக்களை பள்ளியின் EMIS-தளத்தில் பதிவேற்றம் செய்துவிட்டு, 3 நகல்களில் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு (இடைநிலை) அனுப்பி வைக்க வேண்டும் என அனைத்து அரசு/அரசு உதவி பெறும் உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இப்பொருள் சார்பாக பள்ளியிலிருந்து பெறப்படும் கருத்துருக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சரிபார்ப்பு பட்டியலின்படி சரிபார்த்து மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) பரிசீலித்து தங்களின் பரிந்துரையுடன் 2 நகல்களில் இவ்வலுவலகம் அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**இணைப்பு:**

1. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவம்.
2. சரிபார்ப்பு பட்டியல்.

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ)
வேலூர்.

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர்
   (இடைநிலை)
   மாவட்டக் கல்வி அலுவலகம்
   வேலூர்.
2. தலைமையாசிரியர்.
   அரசு/அரசு உதவி பெறும் உயர்/மேல்நிலைப் பள்ளி
   வேலூர் மாவட்டம்.